பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 16 சனிக்கிழமை 10.07.2023 கதிர் 232

# கொக்குத்தொடுவாய் புதைகுழியை ஜூலை 6 தோண்ட நீதிபதி உத்தரவு

## சட்ட மருத்துவ அதிகாரிகள், தடயவியல் நிபுணர்களுக்கு அறிவித்தல் வழங்கவும் பாதுகாப்பை அதிகரிக்கவும் அறிவுறுத்து

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி



தடயவியல் நிபுணர்கள், சட்டமருத்துவ அதிகாரிகள் முன்னிலையில் ஜூலை 6 தோண்டப்படவுள்ளது. இதற்கான கட்டளையை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா பிறப்பித்தார்.

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத் தொடுவாயில், குடிதண்ணீர் விநியோகக் குழாய்களைப் புதைக்கக் குழி தோண்டிய போதுமனிதப்புதைகுழிஒன்றுகண்டுபிடிக்கப் பட்டது. ஆண் பெண்களுக்கான ஆடைகள், பெண்களின் உள்ளாடைகள் என்பவற் ☞2

## இது ரகசியம் அல்ல!

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் உள்ள ரெலோவின் முன்மொழிவு மற்றும் ஆதரவோடு வவுனியா மாவட்டம் நைனாமடுவில் முன்னெடுக்கப்படவுள்ள சீனித் தொழிற்சாலையை அந்தக் கூட்டணிக்குள்ளே இருக்கும் பங்காளிக் கட்சியான ஜனநாயகப் போராளிகள் கட்சி கடுமையாக எதிர்த்துள்ளது. அப்படியொரு தொழிற்சாலை அமைக்கப்பட்டால் அதனை எதிர்த்து மக்களைத் திரட்டிடப் போராட்டம் நடத்தப்படும் என்று அந்தக் கட்சியின் செயலாளர் இ.கதிர் செய்தியாளர்களிடம் நேற்றுத் தெரிவித்தார்.

இந்தத் திட்டம் குறித்து செய்தியாளர் ஒருவர் அவரிடம் கேள்வி எழுப்பியபோது அவர் தெரிவித்த விடயங்களை வாசகர்களுக்கு இங்கு அப்படியே தருகின்றேன்.

வவுனியா மாவட்டம் நைனாமடுவில் அமைக்கப்படவுள்ளசீனித்தொழிற்சாலைக்கு ஜனநாயகப் போராளிகள் கட்சி முற்றிலும் எதிரானது. அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

அந்நிய சக்திகள் எமது வன்னி நிலப்பரப்பை ஆக்கிரமிப்பதுதான்இந்தத்திட்டத்தின்பிரதான நோக்கம் என்று கருதப்படுகின்றது. ☞2

## எதிர்ப்பு


யாழ்ப்பாணம் - ஏழாலை தெற்கு, புளியங்கிணற்றடிவீதியில்பொதுமக்கள்நெருக்கமாக வாழும் குடிமனைப் பகுதியில் தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்கப்பட்டுவருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டம் இன்று நடத்தப்படவுள்ளது.

அப்பகுதியிலுள்ள குடியிருப்பாளர்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் காலை 9.00 மணி முதல் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்கப்பட்டுவரும் காணியின் வாயிலில் போராட்டம் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் நெருக்கமாகக் ☞2

வவுனியா மாவட்டத்தில் உள்ள

## கச்சல் சமளன்குளத்தில் புதிய விகாரை அமைப்பு



வவுனியாவடக்குபிரதேச செயலாளர்பிரிவுக்குஉட்பட்ட வெடிவைத்தகல்லு கிராம அலுவலர் பகுதியில் உள்ள கச்சல் சமளன்குளத்தில் புதிய விகாரையொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

குறித்த விகாரையின் சுற்றுப்புறம்காட்டுப்பகுதியாக காணப்பட்டநிலையில், இந்த விகாரைநிர்மாணிப்புபணிகள் கடந்த காலத்தில் ☞2

## கடன் நீடிப்பு தொடர்பிலான உண்மையை பொது மக்களுக்குத் தெரியப்படுத்துங்கள்

வர்த்தக, தொழிற்சங்க பிரதிநிதிகளிடத்தில் ஜனாதிபதி வேண்டுகோள்

கடன் நீடிப்பு தொடர்பில் மக்களை தெளிவூட்டும் சிறப்புப் பணி வர்த்தக, தொழிற் சங்க குழுவினரை சார்ந்துள்ளதாகவும், அதுபற்றிய உண்மைகளைக் கூறுவதால் இந்நாட்டின் தொழிற்படையினர், பொதுமக்கள் மத்தியில் காணப்படும் அச்சத்தைப் போக்க முடியும் என்றும் ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க தெரிவித்தார்.

வணிகசபையின் உறுப்பினர்கள், வர்த்தகர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்டோரை ஜனாதிபதி அலுவலகத்தில்நேற்றுசந்தித்து கலந்துரையாடலின்போதே ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடன்நீடிப்புவேலைத்திட்டத்தின் கீழ் வட்டி வீதங்கள் குறைவடைவதால் நிதிசார் நடவடிக்கைகளினால் ☞2

## மின் கட்டணக் குறைப்பு இன்று முதல் அமுலுக்கு

இன்றுமுதல்அமுலாகும் வகையில், 14.2 சதவீதத்தால் மின்சார கட்டணத்தை குறைப்பதற்கு இலங்கை பொதுபயன்பாடுகள்ஆணைக் குழுஅனுமதிவழங்கியுள்ளது.

ஆணைக்குழுவின் அறிவிப்பின்படி,

0 முதல் 30 வரையான மின் அலகுகளை பயன்படுத்துவோருக்கானகட்டணம் 65 சதவீதத்தால் குறைக்கப்படவுள்ளது. அந்த பிரிவில் ஒரு அலகு 30 ரூபாவில் இருந்து10ரூபாவாகக்குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்களுக்கான கட்டணம், 400 ரூபாவில் இருந்து 150 ரூபாவாகக் குறைகின்றது.

60 அலகுகளுக்கு குறைவாக பயன்படுத்துவோரின் ஒரு அலகிற்கான கட்டணம் 42 ரூபாவில் இருந்து 32 ரூபாவாக ☞2

## கடன்மறுசீரமைப்பு பற்றி விவாதிக்க இன்று கூடுகின்றது நாடாளுமன்றம்

இறையாண்மைப் படுகடன் நிலைபெறுதன்மையை மீட்டெடுப்பதற்கு உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தலைநடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானத்தை இன்றுமாத்திரம்விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில்நேற்றுக்கூடிய நாடாளுமன்ற அலுவல் கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

இதற்கமைய இன்று மு.ப 9.30 மணி முதல் பி.ப 7.30 மணி வரை குறித்த தீர்மானம் மீதான விவாதம் நடத்தப்படவிருப்பதுடன், வாக்கெடுப்புக் கோரப்பட்டால் பி.ப 7.30 மணிக்கு வாக்கெடுப்பு நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் கலந்துகொண்டிருந்தார். அதேநேரம், அடுத்த வாரம் 4 ஆம் திகதி செவ்வாய்க் கிழமைப் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதில்லையென்றும் இதன்போது தீர்மானிக் கப்பட்டதாகசெயலாளர் ☞2

## யாழ். பல்கலை துணைவேந்தருக்கு புதிய பதவி

கல்வி அமைச்சின் திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும்புத்தாக்கப்பிரிவின்கீழ் நிர்வகிக்கப்படும் ஆர்தர் சி. கிளார்க் நவீன தொழிநுட்பவியல் நிறுவனத்தின் ஆளுநர் சபை உறுப்பினர்களில் ஒருவராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா நியமிக் கப்பட்டுள்ளார்.

கல்விஅமைச்சர்கலாநிதி சுசில்பிறேமஜெயந்தவினால் இந்த நியமனம் வழங்கப் பட்டுள் ☞2

## ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸை மறுசீரமைக்க தவறின் 6000 பேர் தொழிலை இழப்பார்கள்

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா எச்சரிக்கை

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ்நிறுவனத்தைவிரைந்து மறுசீரமைக்க தவறினால் அந்த நிறுவனத்தின் ஊழியர்கள்6000பேர்தொழிலை இழக்க நேரிடும் என துறைமுகம்மற்றும்விமானச் சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

'ஸ்திரமான நாட்டிற்கு, அனைவரும் ஒரே வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில்நேற்றுஏற்பாடுசெய்யப்பட்டிருந்த செய்தியாளர்கள் சந்திப்பில்கருத்துதெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

பலதசப்தங்களுக்குமுன்பு எமக்கான தனித்துவத்துடன் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் விமான சேவை, எமிரேட்ஸ் நிறுவனத்தினால் நிர்வகிக்கப்பட்டபோது 30 மில்லியன் இலாபமீட்டியிருந்தது. அதன் பின்னரான காலப்பகுதியில் எவ்வித இலாபங்களையும் ஈட்டவில்லை.

ஒரு நாளும் விமானங்களை ☞2

## கடன் மறுசீரமைப்புக்கு அரச நிதிக் குழு அனுமதி

தேசியகடன்மறுசீரமைப்புக்கு அரச நிதித் தெரிவுக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பில் நேற்று குழுவில் நடைபெற்ற வாக்கெடுப்பின்அடிப்படையில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரச நிதித் தெரிவுக்குழுவின் கூட்டம் நேற்றைய தினம் இரண்டாவது நாளாகவும்தவிசாளர்கலாநிதி.ஹர்ஷ டி சில்வா தலைமையில் நடைபெற்றது. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், கணக்காய்வாளர் நாயகம், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த கூட்டம் சம்பந்தமாக அதன் தவிசாளரானஹர்ஷடிசில்வா தெரிவித்துள்ளதாவது,

தேசிய கடன்மறுசீரமைப்புக்கான நாடாளுமன்ற அமர்வின்போது, அது தொடர்பில் சில யோசனைகளை முன்வைக்க வேண்டுமெனநாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பரிந்துரைத்துள்ளனர்.

அதற்கமைவாக, மறுசீரமைப்பு தொடர்பான பிரேரணையில் இல்லாத விடயமாகப்புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய விடயமாக இருப்பது கடன் தள்ளுபடி ☞2

அஸ்வெசும உதவி பெறுவதற்கு

## வவுனியாவில் இருந்தே அதிக விண்ணப்பங்கள்

'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு திட்டத்திற்கு இலங்கையில்

வவுனியா மாவட்டத்திருந்தே அதிகளவான விண்ணப்பங்கள்கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இவை 98.08 விகிதமாகக் காணப்படுவதாகவும் ஜனாதிபதி அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அஸ்வெசும' நலன்புரி நன்மைகள் திட்டத்தின் கீழ் இடைநிலை, பாதிக்கப் படக்கூடிய, வறிய மற்றும் மிகவும் வறுமையான குடும்பங்களுக்கு 04 பிரிவுகளின் கீழ் கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளதோடு அங்கவீனமானவர்கள், முதியவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளர்கள் ஆகியோருக்கும் 'அஸ்வெசும' திட்டத்தின் கீழ் நலன்புரிக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

அதற்கமைய தற்காலிக நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்திருக்கும் 400,000 பேருக்கான 2500.00 ரூபாய் மாதாந்த கொடுப்பனவு 2023 டிசெம்பர் 31 வரையிலும் வழங்கப்பட இருப்பதோடு பாதிக்கப்படக்கூடிய 400,000 பேருக்கான 5000.00 ரூபாய் கொடுப்பனவு 2024 ஜூலை 31 வரையிலும் வழங்கப் படவுள்ளது.

மேலும் வறியோர் என்று அறியப்பட்ட பயனாளிகள் 800,000 பேருக்கான 8500.00 ரூபாய் கொடுப்பனவும் மிக வறுமையானவர்களுக்காக மாதாந்தம் 15,000.00 கொடுப்பனவும் 2023 ஜூலை 01 முதல் மூன்று வருட காலத்திற்கு வழங்கப்படவுள்ளன.

தற்போது நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு களை பெற்றுக்கொள்ளும் 72,000 மாற்றுத் திறனாளிகளுக்கு ☞2

## மாவையை அவர் வீட்டில் சந்தித்து மைத்திரி பேச்சு



இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின்தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவை முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன நேற்று யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

மாவை சேனாதிராஜாவினுடைய மாவிட்டபுரத்தில் உள்ள இல்லத்தில் ☞2

## மாயையை உருவாக்கும் முயற்சியில் எதிர்க்கட்சி தோல்வி கண்டுள்ளதாம்

போலிப்பரப்புரைகளைத் தொடர்ச்சியாக முன்வைத்துவரும் எதிர்கட்சி மாயைகளை தோற்றுவிக்கும் முயற்சியில் தோல்வி கண்டுள்ளது என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

'ஸ்திரமான நாட்டிற்கு, அனைவரும் ஒரே வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்ட போது, உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்நாளும் போலிப் பரப்புரைகளை மாத்திரம் முன்வைக்கும் எதிர்கட்சி மாயைகளை தோற்றுவிக்கும் முயற்சியில் தோல்வி கண்டுள்ளது. வங்கிகள், ஊழியர் சேமலாப நிதியம் என்பன முடங்கிவிடும் என்ற போலிப் பரப்புரைகளை முன்னெடுத்தனர்.

இருப்பினும் மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்பதை நிதித்துறையின் முக்கியஸ்தர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். உள்நாட்டுகடன் மறுசீரமைப்புதொடர்பிலான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வோம் - என்றார்.

## இனி இது .....

அதேபோன்றுமகாவலிஅபிவிருத்தி என்ற அடிப்படையில் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறலாம்என்றசந்தேகங்களும்எமக்குஇருக்கின்றது. எங்கள் பங்காளிக் கட்சியாக இருந்தாலும் சரி ஏனைய கட்சிகளாக இருந்தாலும் சரி இந்தச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நாங்கள் தீவிரமாகச்செயற்படுவோம். உண்மையில் இந்தச் சீன நிறுவனம் சீனித் தொழிற்சாலையை அமைப்பதற்காக வரவில்லை. ஆக்கிரமிப்பதே அவர்களின் நீண்டகால நோக்கம். இலங்கை மற்றும் சீன அரசுகள் இணைந்து தமிழர் தாயகப் பகுதியிலே, வன்னிப்பரப்பிலேமிகப்பெரியளவிலான நிரப்பரப்பை ஆக்கிரமிக்கத் திட்டமிடுகின்றன.

இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு எதிராகத் தமிழ் அரசியல்தலைவர்கள்பெரியளவில்குரல்கொடுக்கவில்லை. இதனை எதிர்க்கவில்லை உண்மையாக நாங்கள் நில ஆக்கிரமிப்புக்கு எதிராகத்தான்எமது விடுதலைப் போராட்டத்தைநடத்தினோம். ஆனால் இன்று அந்நிய சக்திகள் வந்து எமது நிலத்தை ஆக்கிரமிப்பதைப் பார்த்துக்கொண்டு எமது அரசியல் தலைவர்கள் தங்களுடைய சந்தர்ப்பவாத அரசியலை முன்னெடுத்து வருகின்றார்கள்.

ஒரு விடயத்தை நாங்கள் தெளிவாகச்சொல்கின்றோம். யாராக இருந்தாலும் சரி, பங்காளிக் கட்சியாக இருந்தாலும் பங்காளிகளாக இல்லாமல் இருக்கலாம் சரி, இலங்கை அரசாக இருந்தாலும்சரி,நாங்கள்இந்த விடயத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அமைச்சரவை அங்கீகாரம்பெறப்பட்டுள்ள இந்தத் தொழிற்சாலையைத் தொடங்கும் காலம் வருகின்றபோது அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களையும் ஒன்று திரட்டி நாங்கள் எதிர்ப்போம். அந்தக் காலம் வரும் வரைக்கும் காத்திருப்போம்- என்றார் அவர்.

கூட்டணிக்குள்இருக்கும்மூத்த தலைவர்களான த.சித்தார்த்தன்,சுரேஸ்பிரேமச்சந்திரன் ஆகியோருக்கு இல்லாத துணிபுஜனநாயகப்போராளிக் கட்சிக்கு இருப்பதைப் பாராட்டத்தான் வேண்டும். நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்ற நக்கீரன் பரம்பரைகளாக, தங்களை அரவணைத்துச் செல்பவர்களாக இருந்தாலும் தவறு என்றால் தவறுதான் என்றுசுட்டிக்காட்டுவதற்கான நேர்மை அவர்களிடம் மிச்சமிருப்பது நல்லதுதான். உண்மையில் அந்தக் கூட்டணிக்குள்குறைந்தபட்சம்ஒரு கட்சிக்காவது மண் மற்றும் மக்கள் சார்ந்தபற்று இருப்பது குறித்து மகிழ்ச்சிப்பட்டுக் கொள்ளவேண்டும் நாம். நான் சொல்வது சரிதானே வாசகர்களே!

**இடிமின்னல்**
(idiminnal23@gmail.com)

## யாழ். ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எது. 1994 ஆம் ஆண்டின் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பவியல் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ், உடனடியாகச் செயற்படும் வகையில் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்கு இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது எனகல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## கடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிப்புக்களை எதிர்கொண்டவர்களுக்கு நிவாரணம் கிட்டும். வட்டி வீதம் குறைவடையும்காலத்தைஉறுதியாக குறிப்பிடமுடியாத போதிலும், சில மாதங்களுக்குள் வட்டி வீதங்கள் குறிப்பிடத்தக்க அளவில்குறைவடையும்என நிபுணர்கள்கணித்துள்ளனர்.

கடன்நீடிப்பை செய்யத் தவறும் பட்சத்தில் சிறிய வியாபாரங்களுக்காகபெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களுக்கானவட்டிவீதங்கள்மீண்டும் பெருமளவில் அதிகரிக்கும்.


அதேபோல் டொலர் வலுவடைந்து காணப்படும் இதுபோன்ற நேரங்களில் டொலரின் பெறுமதி மேலும் அதிகரித்தால் நிலைமை பாரதூரமாகிவிடும் எனத் தெரிவித்த ஜனாதிபதி, வெளிநாட்டு கடன் நீடிப்பை போன்று உள்நாட்டு கடன் நீடிப்பையும் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல் ஊழியர் சேமலாப நிதியத்தின் பயனாளர்களுக்கு 9% சதவீத வட்டி அவ்வண்ணமே பெற்றுக்கொடுப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்பதால் எதிர்கால பலன்கள் பற்றிய நம்பிக்கையை இழக்கவேண்டாம்.

தேசிய கடன் நீடிப்பு செயற்பாடுகளை முன்னெடுக்கும் பட்சத்தில் அபிவிருத்திக்கான உதவிகள் கிடைக்கும். அதனால் கடந்த காலத்தில் முடங்கிக் கிடந்த நிர்மாணத்துறை உள்ளிட்ட ஏனைய துறைகளின் அபிவிருத்தி பணிகளை மீள ஆரம்பிக்க முடியுமெனவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அதனால்ஏற்படக்கூடியபொருளாதார மறுமலர்ச்சியின் ஊடாகபெருமளவானதொழில் வாய்ப்புக்கள் உருவாகும் - என்றார்.

## கொக்குத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



றுடன் மனித எலும்பு எச்சங்களும்அந்தக்குழியில் காணப்படுகின்றன.

மனிதப்புதைகுழிஉள்ள இடத்தை நேற்றுப்பிற்பகலில் நேரில்சென்று பார்வையிட்ட நீதிபதி சரவணராஜா,



அந்த இடத்திற்கான பொலிஸ் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு உத்தரவிட்டார். ஏற்கனவே அங்கு ஆயுதம்தாங்கியபொலிஸார்

பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருந்தபோதும்,ஆள்களின்



எண்ணிக்கை போதாது

என்றுதெரிவித்தநீதிபதி, மேலதிகமாப்பொலிஸாரைக் காவலுக்கு நிறுத்துமாறு பணித்தார்.

கொக்குத்தொடுவாய் மத்தி பகுதியில் வீதியோரம் காணப்படும் இந்தப் புதைகுழி, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினை மேற்கொள் வதற்காக கனரகஇயந்திரம்கொண்டுநிலத்தினை தோண்டியபோது வெளிப்பட்டது.

மனித எச்சங்களைக் கண்டதைஅடுத்துகொக்கிளாய் பொலிசாருக்குதகவல்வழங்கப்பட்டது.பொலிஸார்அதனை நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

புதைகுழியை நேரில் பார்வையிட்ட பின்னர் ஜூலை 6 அதனைத் தோண்டுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். தடயவியல்நிபுணர்கள், சட்ட வைத்திய அதிகாரிகள் ஆகியோருக்கு அறிவித்தல் வழங்குமாறும் உத்தரவிட்டார். அதுவரை எச்சங்கள் அழிவடையாமால் பாதுகாக்குமாறும் கொக்கிளாய்பொலிசாருக்கு பணிப்பு விடுத்தார் இறுதிப் போரின் போது பலவந்தமாகக்காணாமலாக்கப்பட்டவர்கள் பலர் இருக்கும் நிலையிலும் படையினரிடம் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவராத நிலையிலும் இந்த மனிதப் புதைகுழி தமிழர்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. புதைகுழி அடையாளம் காணப்பட்ட பகுதி இறுதிப் போருக்கு முன்னரே பல ஆண்டு காலமாகப் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதி என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதைகுழியில் இருந்துகுழிதோண்டும்போது வெளியே இழுக்கப்பட்ட ஆடைகள்பெண்போராளிகள் அணியும் உடைகளை ஒத்தவையாக இருப்பதாக சம்பவ இடத்திற்கு நேரில் சென்றுபார்வையிட்டவடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார். பெண்களின் உள்ளாடைகளும் அங்கு காணப்படுகின்றன என்று அவர் சுட்டிக்காட்டினார். புதைகுழிக்குள் மேலும் பலருடைய மனித எச்சங்கள் இருப்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன என்றும் அவர் தெரவித்தார்.

மனிதஉரிமைகள்சட்டத்தரணி,கிராமமட்ட அமைப்புக்களின் தலைவர்கள், கிராம மக்கள் உள்ளிட்ட பலரும் நேற்று சம்பவ இடத்திற்குச்சென்று பார்வையிட்டனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனும் நேற்று புதைகுழி இருந்த இடத்திற்கு நேரில் சென்று கள நிலைகளைப் பார்வையிட்டார்.

## மின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைக்கப்படுவதோடு, மாதாந்த கட்டணம் 650 ரூபாவில் இருந்து 300 ரூபாவாகக் குறைக்கப்படுகின்றது.

91 அலகுகள் முதல் 120 அலகுகள் வரை பயன்படுத்துவோரின் ஒரு அலகிற்கான கட்டணம் 42 இல் இருந்து 35 ரூபாவாக குறைகின்றது. இதற்கமைய, மாதாந்த கட்டணம் 1500 ரூபாவில் இருந்து 1000 ரூபாவாகக் குறைகின்றது.

மதநிறுவனங்களுக்கான 16 சதவீதமான மின்கட்டணக் குறைப்பும் இன்றுமுதல் அமுலுக்கு வருகின்றது. குறைந்த அளவு மின்சாரத்தை பயன்படுத்தும் மத நிறுவனங்களுக்கு ஒரு அலகு மின்சாரம் 10 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளதோடு, உடனடியாக சூரிய சக்தியை நிறுவுமாறும் ஆணைக்குழு நிபந்தனை விதித்துள்ளது. ஹோட்டல் துறைக்கு 26.3 சதவீத கட்டணம் குறைக்கப்படுகின்றது. கைத்தொழில் துறைக்கும் 9 சதவீத கட்டண குறைக்கப்படவுள்ளது.

## கச்சல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாரும் அறியாத வகையில் முன்னெடுக்கப்பட்டுதற்போது நிறைவடைந்துள்ளது.

குறித்தவிகாரை அமைந்துள்ளபகுதியானது தொல்பொருளியல் பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டிந்த நிலையில் அங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின்போது அதிலிருந்து கி.பி.முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த பௌத்த சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டமையால் அங்கு விகாரை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

விகாரைக்கு 'சபுமல்கஸ்கட பப்பதாராமய மற்றும் ராஜ மகா விகாரை' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த விகாரையின் நிர்மானப் பணிகளை பாதுகாப்புத் தரப்பினரும், பெரும்பான்மைச் சிங்கள மக்களும் கூட்டிணைந்து முன்னெடுத்திருந்தனர்.

அத்துடன், குருந்தூர் மலையில் நீதிமன்ற உத்தரவை மீறி அமைக்கப்பட்டுவரும் விகாரையின் பிக்குவான கல்கமுவே சந்தபோதி தேரரே இந்த விகாரையின் நிர்வாகப் பணிகள்மற்றும்அனைத்துச் செயற்பாடுகளையும்மேற்பார்வை செய்தார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் அநுராதபுரம் மகாமுனதேஉயன ஸ்ரீமத் சுவர்ணமாலி மகா விகாரையிலிருந்து நான்கு நாட்களுக்கு முன்னதாக நூற்றுக் கணக்கான தேரர்களின் பங்கேற்புடன் தொடங்கிய பாதயாத்திரை இன்றையதினம் மேற்படி சபுமல்கஸ்கட பப்பதாராமய மற்றும்ராஜமகாவிகாரையை வந்தடையவுள்ளது.

இதனையடுத்து விசேட பிரார்த்தனைகள் நடைபெறுவதோடு, நாளையதினம் எலசபொசன் தின வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

## கடன்மறு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயகம்தெரிவித்தார். இதற்கு அமைய நாடாளுமன்றம் அடுத்த வாரம் 5,6,7 ஆம் திகதிகளில் கூடவுள்ளது.

முன்னதாகசனி,ஞாயிறு இரு தினங்களும் நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டு வந்தது.

## ஸ்ரீலங்கன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டிராத மற்றும் விமானங்களில் காலடி வைக்க முடியாமல் இருக்கும் சாதாரண மக்களின்பணத்தினாலேயே இந்தச் சேவைகள் நடத்தப்படுகின்றன. எமக்கென்ற தனியொரு விமான சேவை இருப்பதுபெருமைக்குரியதாக இருந்தாலும்அதனைநடத்திச் செல்வதற்கு வழங்கப்படும் செலவு மிக அதிகமானதாக உள்ளது.

இன்றளவில்ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் கடன்பட்டுள்ளது. சர்வதேச பிணைமுறிகளின் கீழ் குத்தகைக்கு பெறப்பட்ட விமானங்களுக்கான கடன் தொகையை உள்நாட்டு வங்கிகள் உள்ளடங்களான சில நிறுவனங்களே செலுத்தியுள்ளன என்றும், எரிபொருள் கடனையும்செலுத்தவேண்டியிருக்கின்றது, கடன் நெருக்கடிக்கு மத்தியில் விமானச் சேவையொன்றை நடத்திச் செல்வது சாத்தியமற்றதாகும்.

நாட்டில்ஏற்பட்டுள்ளவெளிநாட்டுகையிருப்புபோதாமை உள்ளிட்ட பிரச்சினைகளின் காரணமாகமுன்பைபோன்று இந்த ஆட்சியால் நிதி வழங்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. அவ்வாறுவழங்குவதும் நியாயமற்றது என்பதாலேயே ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி 51சதவீதத்தினை அரசிடம் தக்கவைத்துக்கொண்டு மிகுதியான 49சதவீதத்தியையினே மறுசீரமைப்புக்கு உட்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தைமறுசீரமைக்கும் யோசனைக்கு ஆறு மாதங்களுக்கு முன்பாகவே அமைச்சரவை அனுமதி கிடைத்திருந்தது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுனத்தின் கீழான இறங்குதுறை பணிகள் மற்றும் உணவு வழங்கல்நிறுவனம்ஆகியன வருமானம் ஈட்டுகின்றன. இருப்பினும்அதனால்விமான சேவையின் நட்டத்தை ஈடு செய்ய முடியாதுள்ளது.

அதனால் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ்நிறுவனத்தின் பங்குகளை தனித்தனியாக விற்பனைசெய்யவேண்டுமா என்பது பற்றியும் இது தொடர்பில்அமைச்சரவையில் சமர்பிக்கப்பட்ட யோசனைகள் பற்றியும் சர்வதேச நிதி நிபுணத்துவம் கொண்டவர்களின் ஆலோசணைகள் பெற்றுக்கொள்வதற்காக சமர்பிக்கப்பட்டுள்ளன. மேற்படிச் செயற்பாடுகளை மிகவும் வெளிப்படைத் தன்மை மிக்கதாக முன்னெடுக்க எதிர்பார்த்திருக்கின்றோம்.

குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்குள் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை மறுசீரமைக்க எதிர்பார்த்துள்ள நிலையில் இந்தச் செயற்பாடுகளின் பின்னர்அதன்உரிமைகளை உறுதிப்படுத்திக்கொண்டு உரிய முதலீடுகளுக்காக வழங்க தீர்மானிக்கப் பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்

அதன் பின்னர் அதன் மேலதிக அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் சுட்டிக்காட்டிய அமைச்சர் அதனைச்செய்யத்தவறினால் அந்த நிறுவனத்தின் 6000 ஊழியர்கள் தொழிலை இழக்கும்நிலைமை உருவாகும்.

கொறொனாபெருந்தொற்றுக்குப் பின்னர் உலகின் அனைத்து நாடுகளினதும் விமான சேவைகள் பாதிக்கப்பட்டன. சுற்றுலாப் பயணிகளும்நாடுகளுக்குவரவில்லை. சில நாடுகள் விமானங்களை விமான நிலையங்குள்ளேயேதரித்துவைத்திருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன.

அதற்கு மத்தியில் கட்டார் விமானச் சேவையின் விமானிகள் 70 பேர் பணி நீக்கப்பட்டனர். இருப்பினும் எமது விமான சேவை ஊழியர்களுக்கு அரைவாசி சம்பளத்தை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்திருந்தோம். விமானிகள் வீடுகளில் இருந்தாலும் அவர்களுக்கு சம்பளம் வழங்கும் வகையிலான மனிதாபிமான செயற்பாடுகளை நாம் முன்னெடுத்திருந்தோம்.

கொரோனா தொற்றின் பின்னர் நாட்டில் ஆர்ப்பாட்டங்கள்வலுப்பெற்றன. அந்தச் செயற்பாடுகள் சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு தடையை தடுத்திருந்தது எவ்வாறாயினும் அந்த அனைத்து நிலைமைகளையும் சீரமைத்த பின்னர் விமானச் சேவையை மீள ஆரம்பிக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஆட்சியினால்முடிந்துள்ளது. அதனால் நாளாந்தம் பெருமளவான சுற்றுலாப் பிரயாணிகள் நாட்டிற்கு வருகை தருகின்றனர் - என்றார்.

## கடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது வட்டியைக் குறைத்தலாகும்.

இதேநேரம், ஊழியர் சேமலாப நிதியத்தின் வட்டியில் மாற்றம் ஏற்படுத்தப்படுகின்றது. இது தொடர்பில் அனுமதியை அளிப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்காக நிதிக்குழு வாக்கெடுப்பிற்குச் சென்றது.

இச்சமயத்தில் தலைவர் என்ற வகையில் நான் வாக்களிப்பதைத் தவிர்த்தேன். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர். ஆளும்கட்சி உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். இதனால் அனுமதி அளிப்பதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அந்த வகையில் அரச நிதிக்குழுவின் யோசனைகளை, தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பான விவாதத்தின்போது சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பேன் - என்றார்.

## மாவையை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பு இரவு இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் களான அங்கஜன் இராமநாதன்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் சஜின் டி வாஸ் குணவர்தன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பேராசிரியர் சமில லியனகே, ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் பொலன்னறுவை மேற்கு அமைப்பாளர் தஹாம் சிறிசேனஉள்ளிட்டவர்களும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அங்கஜன் இராமநாதனின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணத்துக்கான 3 நாள் பயணமாக வந்துள்ள மைத்திரிபால சிறிசேன, பல்வேறுபட்ட சமூக மட்ட நிகழ்வுகளிலும், மக்கள் சந்திப்புகளிலும் கலந்துகொண்டுள்ளார்.

தன்னுடனானசந்திப்பில் தமிழ் மக்களுடைய இனப் பிரச்சனைக்கான தீர்வு மற்றும் நாட்டில் நிலவுகின்ற மதமுரண்பாடுகளைத்தவிர்ப்பதற்கான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியதாகமாவைசேனாதிராஜா ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார்.-

## எதிர்ப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடிமனைகள் காணப்படுவதனால், பொது மக்களுக்குத் தீங்கு விளைவிக்காத வகையில் தொலைத்தொடர்புக் கோபுரத்தை இடமாற்றுமாறு அதனை அமைத்து வரும் நிறுவனத்திடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்., இது தொடர்பில் சுன்னாகம் பொலீஜாரிடம் முறைப்பாடு செய்த போதும் இதுவரை எந்தநடவடிக்கையும்எடுக்கப்படவில்லை. இதனாலேயே கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது என அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

## வவுனியாவில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதாந்தம் 5000.00 ரூபாய் வீதமும், சிறுநீரக பாதிப்புக்கான நிவாரணங்களைப் பெறும் 39,150 பேருக்கு 5000.00 ரூபாய் வீதமும்முதியவர்களுக்கான கொடுப்பனவுகளை பெறும் 416,667 பேருக்கு 2000.00 ரூபாய் என்ற அடிப்படையிலும்கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்காக நாடளாவிய ரீதியிலுள்ள 340 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து 3,712,096 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

உறுதிபடுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்களில் அதிகளவானவை வவுனியா மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளன அங்கு 8.08 சதவீத மானவர்கள் விண் ணப்பித்துள்ளனர். அடுத்த படியாக கண்டியிலிருந்து 96.05 சதவீகிதமும்,ஐ கிளிநொச்சியிலிருந்து 96 சதவீகிதமும், யாழ்ப்பாணத்திலிருந்து 96 சத வீகிதமும் திருகோணமலையிலிருந்து 95.5 சதவீதமும் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன். நாடு முழுவதும் 3,362,040 விண்ணப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என ஜனாதிபதி அலுவலகம்மேலும்தெரிவித்துள்ளது.

(100)

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22



காலைக்கதிர் Kalaikkathir

# 25 பெண்கள் உட்பட 31 பேர் புத்தூரில் பொலிஸாரால் கைது

## வீடு புகுந்து வன்முறையில் ஈடுபட்டனராம்

யாழ்ப்பாணம், புத்தூரில் இரண்டு வீடுகளுக்குள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்டவர்களில் 25 பெண்கள் உட்பட 31பேர் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் பலரை தேடி பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

யாழ்ப்பாணம்- புத்தூர் கலை ஒளி கிராமத்தில் இளைஞர்கள் இருவரின் வீடுகளுக்குள் புகுந்த 50 இற்கும் மேற்பட்டோர் இருவரையும் தாக்கியதுடன் பெறுமதியான பொருள்களையும் அடித்து சேதப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் இரண்டு வீடுகளும் முற்றிலும் சேதமடைந்ததுடன் இரண்டு இளைஞர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தின் போது காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் அச்சுவேலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார்.

பெண்களின் ஒளிப்படங்களை கணினியில் கிராபிக் செய்து சமூக ஊடகங்களில் வெளியிட்டனர் என்ற அடிப்படையில் 21 வயது தொடக்கம் 25 வயதான இளைஞர்கள் இருவரின் வீடுகள் மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியே கட்டுப்பாட்டுக்குள் பொலிஸார் கொண்டு வந்தனர் எனவும் அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். புத்தூர் கலை ஒளி கிராமத்தைச் சேர்ந்த பெண்களின் படங்களை கணினியில் கிராபிக் செய்து அசிங்கமாக சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டன என்று அச்சுவேலி பொலிஸ் நிலையம் ஊடாக சைபர் குற்றப் பிரிவில் மூன்று மாதங்களுக்கு முன்னர் முறையிட்ட நிலையில் காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படாமையே குறித்த வன்முறைக்கு காரணம் எனத் தெரிய வருகிறது. அவை தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில் இளைஞர்கள் இருவர் மீது சந்தேகம் கொண்டு அவர்களின் வீடுகளுக்குள் புதன்கிழமை இரவு 11.30 மணியளவில் புகுந்த 50 இற்கும் மேற்பட்டோர் அவர்களை கடுமையாகத் தாக்கியுள்ளனர். அத்துடன், வீடுகளுக்குள் இருந்த பெறுமதியான பொருள்கள் மற்றும் வீட்டு வளாகத்திலிருந்த வாகனங்களும் அடித்து நொருக்கப்பட்டன. காயமடைந்த இளைஞர்கள் இருவரையும் வைத்தியசாலைக்கு அழைத்து செல்வதை தடுத்த போதும் அங்கு வருகை தந்த பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். வன்முறை சம்பவம் தொடர்பிலான மேலும் பலரை கைது செய்ய அச்சுவேலி பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (05)



## சொகுசு பஸ் எரிந்து நாசம்

யாழ்ப்பாணத்தில் இருந்து43பயணிகளுடன் கொழும்பு நோக்கிச்சென்ற தனியார் அதிசொகுசு பஸ் தீக்கிரையாகியுள்ளது.

புத்தளம், மதுரங்குளி பகுதியில் நேற்று அதி காலை 3.30 மணிக்கு இந்தவிபத்து நேர்ந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, பஸ்ஸில் சென்ற பயணிகள் அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டு மற்றுமொரு பஸ்ஸில் கொழும்பு நோக்கி அனுப்பி வைக்கப்பட்டனர்.

குறித்த பஸ்ஸின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறே இந்த விபத்துக்கான காரணம் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மதுரங்குளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## லைற்றர் வெடித்து பெண் உயிரிழப்பு


லைற்றர் வெடித்து எரி காயங்களுக்கு இலக்கான குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, பளை இந்திராபுரத்தைச் சேர்ந்த ஜெயந்தன் கேதீஸ்வரி (வயது 33) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சமையலுக்காக எரிவாயு அடுப்பை லைற்றர் மூலம் பற்றவைக்க முயன்ற வேளையில் அது வெடித்து அணிந்திருந்த ஆடையில் தீப்பற்றியுள்ளது.

எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காகக் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார். (05)



## பக்தர்கள் மனங்கவர்ந்த நயினாதீவு பூந்தண்டிகை

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பெருவிழாவின் பதினொறாவது திருவிழாவாகிய பூந்தண்டிகைத் திருவிழா வியாழக்கிழமை இரவு இடம்பெற்றது.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் மஹோற்சவ கொடியேற்றம் ஜூன் 19 தொடங்கியது. நாளை சப்பறத் திருவிழாவும், ஜூலை 2 தேர்த்திருவிழாவும், ஜூலை 3 தீர்த்தோற்சவமும், ஜூலை 4 தெப்போற்சவமும் இடம்பெறவுள்ளது. இந்த ஆலயத்தின் வருடாந்த



பெருவிழாவில் நயினாதீவு நாகபூசணி அம்மன், விநாயகர், முருகன், வள்ளி, தெய்வானை உள்ளிட்ட தெய்வங்கள் பூந்தண்டிகை தொட்டியில் வீற்று பக்தர்களுக்கு அருள்பாலித்துள்ளனர்.

# மடுவுக்கு வருவோர் பொழுதுபோக்கை தவிர்த்துவிடுங்கள்

## மன்னார் ஆயர் கோரிக்கை

மன்னார், மடு ஆலயத்தின் ஆடி திருவிழாவுக்கு வருகை தரும் பக்தர்கள், ஆலயத்தில் வழிபாடுகள் நடைபெறுகின்றபோது வீடுகள் அல்லது கூடாரங்களில் இருந்து பொழுதுபோக்குவதைத் தவிர்த்து, வழிபாடுகளில் கலந்துகொண்டு அன்னையின் ஆசியை பெற்றுக்கொள்ளும்படி மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.



மன்னார், மடு தேவாலயத்தின் ஆடிமாத திருவிழா தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

மடு ஆடி திருவிழாவை முன்னிட்டு பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வரும் அனைத்து திணைக்களங்களின் ஒத்துழைப்புகளுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். உங்கள் ஒத்துழைப்பாலேயே இவ்வாறான பெரும் விழாவை சிறப்பாக கொண்டாட முடியும்.

இந்த ஆடி மாத பெருவிழாவுக்கு தற்போது அதிகமான பக்தர்கள் வந்துவிட்டார்கள்.

கடந்த ஆண்டு எரிபொருள் தட்டுப்பாடு காணப்பட்டமையால் பெரும்பாலான பக்தர்கள் இவ்விழாவுக்கு வருகை தர முடியாத நிலை ஏற்பட்டது. ஆனால், இம்முறை இவ்வாறான பிரச்சினைகள் இல்லாததால் பக்தர்களின் கூட்டம் அதிகரித்திருக்கிறது.

மடு திருத்தல வளாகத்துக்குள் யாத்திரிகர்களுக்கு அமைக்கப்பட்டுள்ள 580 வீடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் பலர் இப்போது கூடாரங்களை அமைத்து தங்கியிருக்கின்றனர்.

இன்றைய நிலையை பார்க்கும்போது மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் ஜூன் 29 ஆம் திகதியிலிருந்து ஜூலை 3 ஆம் திகதி வரை விடுமுறை தினங்கள் அமையப்பெற்றுள்ளதால் அதிகமான மக்கள் இவ்விழாவுக்கு வருகை தருவதாகத் தெரிய-வருகிறது.

ஆகவே, இத்திருவிழாவுக்கான ஒழுங்குகளை சரியான முறையில் ஒழுங்குபடுத்தவேண்டிய அவசியம் உண்டு. இதில், அரசதரப்பினரதும் ஏனைய-வர்களினதும் ஒத்துழைப்பை எதிர்பார்த்து நிற்கின்றோம். மாவட்ட அரசாங்க அதிபரின் திட்டங்களுக்கு கீழ் யாவரும் சிறப்பான ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என நினைக்கின்றேன்.

மேலும், மடு திருத்தலத்துக்கு யாத்திரிகர்களாக வரும் பக்தர்கள் இங்கு வழிபாடுகள் நடைபெறுகின்றபோது வீடுகளில் அல்லது கூடாரங்களில் இருந்து பொழுதுபோக்குவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

பெருவிழாவுக்கு முதல் நாள் அதாவது ஆடி மாதம் முதலாம் திகதி மாலை ஆராதனை 6 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும். அதன் பின்னர் திவ்விய நற்கருணை ஆராதனையுடன் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

ஜூலை 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பெருவிழா காலை 5 மணிக்கு முதல் திருப்பலியும், இதைத் தொடர்ந்து 6.15 மணிக்கு ஆயர்களின் தலைமையில் திருவிழா திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

அதனை தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும் என அவர் தெரிவித்தார். (05)

## நிலுவையை வழங்கியது மின்சார சபை

ஏப்ரல் 30 ஆம் திகதி வரை சூரிய சக்தி மின் உற்பத்தி வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய 400 கோடி ரூபா நிலுவைக்கொடுப்பனவுகளை செலுத்தியுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த 12 மாதங்களாக 400 கோடி ரூபா நிலுவையில் இருந்தது. இலங்கை மின்சார சபை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வழங்குநர்கள், தனிப்பட்ட மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் ஏனைய வழங்குநர்களுக்கான மற்றைய அனைத்து கட்டண நிலுவைகளை தொடர்ந்து செலுத்தும் என்றும், மேலும், மாதாந்த கட்டணத் திட்டத்தில் அடுத்த ஆறு மாதங்களுக்குள் அவற்றை முழுமையாக செலுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# சிறுவர் மீதான வன்முறைகள் யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பு



யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் இவ்வருடம் சிறுவர்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

2022 ஜனவரி முதல் டிசெம்பர் மாதம் வரை பெண்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய், பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 06 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதோடு சிறுவர்களுக்கெதிரான வன்மு-றை சம்பவங்கள் தொடர்பில் 53 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

எனினும், 2023 ஜனவரி மாதம் முதல் மே மாத இறுதிவரை பெண்களுக்கெதிரான வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 04 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு கடந்த ஐந்து மாதங்களில் சிறுவர்களுக்கெதிரான வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 53 முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் நிலையங்கள் முறையே யாழ்ப்பாணம் 06, சுன்னாகம் 14, மானிப்பாய் 04, கோப்பாய் 06, கொடிகாமம் 03, சாவகச்சேரி 06, வட்டுக்கோட்டை 05, ஊர்காவற்துறை 07 என முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளன.

18 வயதுக்குட்பட்டோரை அச்சுறுத்தல், துன்புறுத்துதல், காயப்படுத்துதல், மிரட்டுதல், சித்திரவதைக்குட்படுத்துதல், உளரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தல், பாலியல் ரீதியாக துன்புறுத்தல், பாலியல் ரீதியான தொல்லை போன்ற வன்முறை சம்பவங்களாக இவை காணப்படுகின்றன.

வீடுகள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்களில் வன்முறை ஏற்படுத்தப்பட்டமை தொடர்பிலாக 53 முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளன என புள்ளிவிவரங்களில் பதிவாகியுள்ளது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுடன் தொடர்புடையோர் உரிய முறையில் விசாரணைக்குட்படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டுள்ளதோடு பலர் நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக சிறுவர்களுக்கெதிரான வன்முறை சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுமிடத்து குறித்த முறைப்பாடு தொடர்பில் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்ற சட்டநியதியின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் அனைத்திற்கும் உரிய சட்டகோவைக்கு அமைய நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் முதல் அரையாண்டு பகுதிக்குள் சிறுவர்களுக்கெதிரான வன்முறை சம்பவங்கள் அதிகரித்த நிலை காணப்படுகின்றது.

மேலும், யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் வழிகாட்டுதலின்படி யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பெண்கள் பாடசாலைகளில் வகுப்பு ஆசிரியர்கள் அனைத்து மாணவர்களின் பெற்றோர்களின் தொலைபேசி இலக்கங்களை உள்ளடக்கி வட்ஸ் அப் குழுவை உருவாக்கி மாணவர்களின் வரவு மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் குறித்த குழுவில் பகிர்ந்து மாண வர்களின் பாதுகாப்பு மற்றும் ஏனைய எதிர் விடயங்களை உறுதிப்படுத்தும் வேலைதிட்டம் ஒன்றினை பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## சித்த வைத்திய பொன்விழா

யாழ்.கைதடி சித்த போதன வைத்தியசாலையின் 50ஆவது ஆண்டு நிறைவு பொன்விழா கொண்டாட்டம் வியாழக்கிழமை சிறப்பாக இடம் பெற்றது.

வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சியாமா துரைரட்ணம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், ஆயுர்வேத திணைக்கள உதவி ஆணையாளர் பி.அத்துல, சுகாதார அமைச்சின் அபிவிருத்திப் பிரிவு திட்டப் பணிப்பாளர் பொன்னையா தயானந்தா, ஆயுர்வேத திணைக்கள வட மாகாண உதவி ஆணையாளர் கனகேஸ்ரி ஜெபநாம கணேசன் உட்பட பலர் கலந்துகொண்டனர். மூலிகை தோட்டமும் திறந்துவைக்கப்பட்டது அங்கு புதிய மூலிகைச் செடிகளும் நாட்டப்பட்டன.

நிகழ்வில் சித்தத்தின் பொற்குகை என்ற பொன்விழா நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

சித்த மருத்துவத் துறைக்குத் தொண்டாற்றிய-வர்கள் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

## காங்கேசன் சீமெந்து ஆலையில் இரும்பு திருடிய 2 பேர் கைது



யாழ்ப்பாணம் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் இரும்புகளை திருடிய குற்றச்சாட்டில் இருவரை வியாழக்கிழமை காங்கேசன்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரிடம் இருந்தும், சுமார் 2 ஆயிரத்து 500 கிலோ இரும்பை மீட்டுள்ளதாகவும், கைதானவர்களில் ஒருவர் சீமெந்து தொழிற்சாலைக்கு அருகில் உள்ள நல்லிணக்கபுரம் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் மற்றைய நபர் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பொலி-ஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதே வேளை, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு அருகில் உள்ள மாங்கொல்லை எனும் பிரதேசம் கடந்த 33 ஆண்டுகளாக இராணுவ கட்டுப்பாட்டினுள் இருந்த நிலையில், கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இராணுவத்தினர் அப்பகுதியில் இருந்து வெளியேறி இருந்தனர்.

குறித்த பகுதி இன்னமும் காணி உரிமையாளர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படாத நிலையில், அப்பகுதிகளுக்குள் ஊடுருவும் இரும்பு திருடும் நபர்கள், வீடுகளை உடைத்தும், காணிகளுக்குள் காணப்படும் இரும்புகளை திருடி செல்கின்றனர். திருட்டு சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டும் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தால் தொடர்ந்தும் இரும்புகள் களவாடப்பட்டு வருவதுடன் , அப்பகுதிக்கு அண்மித்த பகுதிகளில் மீள் குடியேறியுள்ள மக்கள் , திருடர்களின் நடமாட்டத்தால் அச்சத்தில் உறைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே பொலிஸார் அப்பகுதிகளில் சுற்றுக்காவல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு திருட்டு சம்பவங்களை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசியல் தீர்வுக்கான அடிப்படையுமல்ல 13

இந்தியாவின் ஆளும் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் அண்ணாமலை அண்மையில் லண்டன் சென்றிருந்தார். ஈழத் தமிழர்களுடன் அவர் நடத்திய சந்திப்புக்களில், இலங்கையில் தமிழர்களுக்கு அரசமைப்பின் 13ஆவது திருத்தம்தர் நிரந்தரத் தீர்வுக்கான அடிப்படையாக அமையும் என்று தெரிவித்திருக்கிறார். அதனை இங்குள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சியும் வரவேற்றுள்ளது.

இலங்கையில் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அடிப்படைக் கட்டுமானமாக ஏற்றுக்கொண்டு அதில் நின்றபடி சுயநிர்ணய உரிமையைப் பெற முயற்சிக்கவேண்டும் என்று அந்தக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இந்திய ஆளும் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை அண்மையில் பிரித்தானியாசென்றிருந்தார். அங்குஅவர், ஈழத்தமிழர்கள் தொடர்பான இந்திய அணுகுமுறை எதிர்காலத்தில் எப்படி அமையும் என்பதை வெளிப்படுத்தியிருந்தார்.

இலங்கையில் தமிழர்கள் எந்தவித அதிகாரங்களும் அற்ற நிலையில் வாழும்போது, அரசமைப்பின் 13ஆவது திருத்தம் அவர்களுக்கான தீர்வின் அடித்தளமாக இருக்கும் என்பதை பிரித்தானியாவில் வாழும் எமது ஈழத் தமிழர்கள் ஏற்றுக்க ொண்டிருக்கிறார்கள். தற்போதைய சூழலை உணர்ந்து புலம்பெயர் தமிழர்கள் யதார்த்தமாகச் செயற்படுகின்றார்கள். அதை வரவேற்கின்றோம். அது எமக்கு மகிழ்ச்சிகரமான செய்தியாக இருக்கின்றது.

13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும் அண்ணாமலை அங்கே குறிப்பிட்டிருந்தார். ஈழத் தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வாக அமையப்போகின்ற சுயநிர்ணய உரிமை என்பதை 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலிருந்துதான் பெற்றுக்கொள்ள முடியும் என்று நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

தீர்வுக்கான அடிப்படைக் கட்டுமானமாக 13ஆவது திருத்தச் சட்டத்தை நாம் ஏற்றுக்கொண்டு அதில் நின்று கொண்டுதான் தொடர்ச்சியாக நாம் பயணிக்கவேண்டும். அதனை அண்ணாமலை வெளிப்படுத்தியிருப்பது எமக்கு மகிழ்ச்சியான விடயம். அதற்காக நாம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்வாறு ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்திருக்கின்றார். அண்மைக் காலமாக அரசமைப்பின் 13ஆவது திருத்தமே தமிழர்களுக்குத் தீர்வு அல்லது 13ஐ அடித்தளமாகக் கொண்ட தீர்வு என்பது பற்றிய உரையாடல்களைக் கேட்க முடிகின்றது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தமிழர்களுக்கு ஒரு தீர்வாக இருக்கவே முடியாது அல்லது தீர்வுக்கான அடிப்படையாகக்கூட இருக்க முடியாது. இதுதான் 13ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது முதல் தமிழர்களின் நிலைப்பாடு. 13ஆவது திருத்தத்தை தமிழர் தரப்பின் அனைத்து அரசியல் கட்சிகளுமே எதிர்த்துள்ளன.

13ஆவதுதிருத்தம்இலங்கையின்அரசமைப்பில்ஏற்கனவே இருப்பதால் அதிலுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கி அந்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாடு இலங்கை ஆட்சியாளர்களுக்கு இருக்கின்றது என்பது வலியுறுத்தப்படுகின்றதே தவிர, 13 தீர்வுக்கான அடிப்படையாகக்கூட இருக்கமுடியாது.

ஏனெனில் தமிழர்கள் எதிர்பார்க்கும் தீர்வின் ஒரு சதவீதத்தைக்கூட 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டிருக்கவில்லை. அது அதிகாரப் பகிர்வின் ஓர் அலகாகக்கூட இல்லை. அதற்கு சுயமான நிதி அதிகாரமோ, அரசியல் அதிகாரமோ இல்லை. அப்படியிருக்கும்போது அதனை தீர்வுக்கான அடிப்படையாக ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. சுயநிர்ணயஉரிமைக்கானபாதையின்முதல்படியாக அதனைக் கொள்ளவே முடியாது.

இலங்கை அரசு தனது கடமையை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்துவது 13ஐத் தமிழ் மக்கள் தமது தீர்வாக ஏற்றுக்கொண்டார்கள் என்று அர்த்தமாகிவிடாது. 13 முழுமையாக நிறைவேற்றப்படும் அதேநேரம் நிரந் தரத் தீர்வுக்கான பேச்சு முயற்சியும் சமாந்தரமாக மேற்கொள்ளப்பட்டாக வேண்டும்.




## குடிநீருக்காக அல்லாடும் கல்லரிப்பு பழங்குடிகள்

### அரசியல்வாதிகள், அதிகாரிகள் கவனிப்பார்களா?

(வி.ரி.சகாதேவராஜா)

நீர் இன்றி அமையாது இவ்வுலகு என்று கூறுகின்றார் தெய்வப்புலவர் வள்ளுவர். ஆனால் இந்த நவீன யுகத்தில் நீர் இல்லாமல் ஒரு முழுக் கிராமமே தத்தளித்துக்கொண்டிருக்கின்றது. அவர்களைக்கவனித்து வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு இந்த உலகிற்கு நேரமும் இல்லை மனமும் இல்லை என்பதுதான் யதார்த்தம்.

மட்டக்களப்புமாவட்டத்தில் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வரலாற்று பிரசித்தி பெற்ற முருகன் ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்திருக்கின்றது அந்த கிராமம்.

கல்லரிப்பு என்பது அந்தக் கிராமத்தின் பெயர். கிராமத்தில் 41 குடும்பங்களைச் சேர்ந்த தமிழ் பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் கடந்த காலங்களிலே தமது குடிதண்ணீர் மற்றும் தண்ணீர்த் தேவைகளுக்காக ஆற்றிலும் ஓடையிலும் தங்கியிருந்தார்கள்.

ஊரிலுள்ள கிணறுகளின் தண்ணீர் மனிதப் பாவனைக்கு உரியதாக இருக்கவில்லை. மாணவர்களின்சீருடைகளைகிராமத்தில் உள்ள தண்ணீரில் துவைத்தால், அவை வெள்ளைக்குப் பதில் பழுப்பு நிறமாக மாறும் என்கிறார்கள் கிராமவாசிகள்.

சுத்தமான நீர் எடுக்க வேண்டுமாக இருந்தால் சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் நடந்து அதனை பெற வேண்டிய தேவையுள்ளது.







நாளடைவில் பிரதேச சபையூடாக குடிதண்ணீர் வழங்கப்பட்டு வந்துள்ளது. அதுவும் சில நேரங்களில தாமதமாகத்தான் கிடைக்கும். அவ்வேளைகளில் ஆற்றில் இருந்து நீரை பெறுவார்கள்.

"எமது ஊரில் பாடசாலை இல்லை. மாணவர்கள் சீருடைகளை இங்கு கழுவினால் பழுப்பு நிறத்தில் காணப்படும். அருகிலுள்ள பாடசாலைக்கு செல்லும் எமது மாணவர்களுக்கு அது சிரமம். ஆசிரியர்கள்சிலவேளைகளில் இந்த நிறம் பற்றி கேள்விகள் கேட்பதுண்டு'' என்றார் ஊரில் உள்ள பெரியவர் ஒருவர்.

இந் நிலையில் இங்கு ஒரு குடிதண்ணீர்த் திட்டத்தை மேற்கொள்ள வெளிநாட்டு உதவியோடு அரச சார்பற்ற நிறுவனமொன்றுமுன்வந்தது.

பிரைற் பியூச்சர் இன்டர் நஷனல் யுகே (Bright future international UK) என்றநிறுவனம்தான் இத் திட்டத்திற்கு நிதி உதவி வழங்கியது. இந்தக் குடிதண்ணீர்த் திட்டம் 31.3.2023 தொடங்கப்பட்டது.

ஆற்றில் இருந்து நீரை பெற்று சுத்திகரிப்புச் செய்து மக்களுக்கு வழங்குவது என்பதே திட்டம். ஆற்று நீரைப் பெறுவதற்கான மோட்டாரின் மின்சாரச் செலவுக்காக குடும்பம் ஒன்று மாதம் 100 ரூபாய் செலுத்தவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

மக்களும் மகிழ்ச்சியோடு அந்தநூறு ரூபாய் வழங்கினார்கள் ஆனால் அந்த மகிழ்ச்சி ஒரே ஒரு மாதம் வரைதான் நீடித்தது.

ஒரு மாதமே மட்டுமே குடிதண்ணீர் கிடைத்தது. அதுவும் எதிர்பார்த்த சுத்தமான நீர் இல்லை.பின்னர் மீண்டும் பழைய கதைதான். தண்ணீர் வரவில்லை. ஏன் என்று கேட்டதற்குத் தண்ணீரைச் சுத்திகரிப்பதற்கான இரசாயனப் பதார்த்தம் ஏதோ வரவேண்டும் என்றும் அது வரும் வரையில் தண்ணீர் வழங்க முடியாது என்றும் ஒப்பந்தக்காரர் தெரிவித்துவிட்டார்.

மார்ச் மாதம் மாத்திரமே இந்தத் திட்டத்தின் மூலம் குடிதண்ணீர் வழங்கியிருந்தார்கள். தற்போது இக் குடிதணணீர்த் திட்டமும் நிறுத்தப் பட்டுவிட்டது.

"மீண்டும் நாங்கள் குடிநீருக்காக வெகு தூரம் செல்ல வேண்டியுள்ளது."

தற்பொழுது அந்த மக்கள் குடிநீருக்காக தொலைதூரம் அலைகிறார்கள்.

இதனை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் கவனிக்கவேண்டும்என்றுஅந்தமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றார்கள். கவனிப்பார்களா?

ஊரிலுள்ள கிணறுகளின் தண்ணீர் மனிதப் பாவனைக்கு உரியதாக இருக்கவில்லை. மாணவர்களின் சீருடைகளை கிராமத்தில் உள்ள தண்ணீரில் துவைத்தால், அவை வெள்ளைக்குப் பதில் பழுப்பு நிறமாக மாறும் என் கிறார்கள் கிராமவாசிகள்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Roty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# மோடியின் காலத்திலேயே தமிழருக்கு நிரந்தரத் தீர்வு

## இப்படி நம்புகின்றது ஜனநாயகப் போராளிகள் கட்சி

இலங்கையில் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அடிப்படைக் கட்டுமானமாக ஏற்றுக்கொண்டு அதில் நின்றபடி சுயநிர்ணய உரிமையைப் பெற முயற்சிக்கவேண்டும். இந்தப் பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சிக் காலத்திலேயே ஈழத் தமிழர்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

இவ்வாறு தெரிவித்தார் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர். யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

இந்திய ஆளும் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை அண்மையில் பிரித்தானியா சென்றிருந்தார்.

அங்கு அவர், ஈழத் தமிழர்கள் தொடர்பான இந்திய அணுகுமுறை எதிர்காலத்தில் எப்படி அமையும் என்பதை வெளிப்படுத்தியிருந்தார்.

இலங்கையில் தமிழர்கள் எந்தவித அதிகாரங்களும் அற்ற நிலையில் வாழும் போது, அரசமைப்பின் 13ஆவது திருத்தம் அவர்களுக்கான தீர்வின் அடித்தளமாக இருக்கும் என்பதை பிரித்தானியாவில் வாழும் எமது ஈழத் தமிழர்கள் ஏற்றுக்கண்டிருக்கிறார்கள். தற்போதைய சூழலை உணர்ந்து புலம்பெயர் தமிழர்கள் யதார்த்தமாகச் செயற்படுகின்றார்கள். அதை வரவேற்கின்றோம். அது எமக்கு மகிழ்ச்சிகரமான செய்தியாக இருக்கின்றது.

13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும் அண்ணாமலை அங்கே குறிப்பிட்டிருந்தார். ஈழத் தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வாக அமையப்போகின்ற சுயநிர்ணய உரிமை என்பதை 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலிருந்துதான் பெற்றுக்கொள்ள முடியும் என்று நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

தீர்வுக்கான அடிப்படைக் கட்டுமானமாக 13ஆவது திருத்தச் சட்டத்தை நாம் ஏற்றுக்கொண்டு அதில் நின்றுகொண்டுதான் தொடர்ச்சியாக நாம் பயணிக்க வேண்டும். அதனை அண்ணாமலை வெளிப்படுத்தியிருப்பது எமக்கு மகிழ்ச்சியான விடயம். அதற்காக நாம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தமிழ் மக்கள் தொடர்பில் எடுத்திருக்கும் தீர்மானம் என்பது மெல்ல மெல்ல வளர்ச்சிபெற்றுச் சென்றுகொண்டிருக்கின்றது. அதை நாங்கள் ஆதரிக்கின்றோம். ஏற்றுக்கொள்கின்றோம்.

அவருடைய தீர்மானங்கள், செயற்பாடுகள், எமக்குத் திருப்தியளிக்கின்றது. அவருடைய ஆட்சியிலேயே தமிழ் மக்களுக்கான ஒரு நிரந்தரத் தீர்வைப்பெற்றுக்கொள்ளலாம் என்கிற நம்பிக்கை எம்மிடம் உருவாகி வருகின்றது. போர் முடிவுக்குப் பின்னர் பதவிக்கு வந்த இலங்கை ஆட்சியாளர்கள் தமிழர்கள் மீது அரசியல் ரீதியாகவும் சரி, பொருளாதார ரீதியாகவும் சரி, எமது உரிமை ரீதியான விடயங்களாயினும் சரி அடக்குமுறை மூலம் எம்மை அடியோடு அழிக்கும் செயற்றிட்டத்தில் ஈடுபட்டிருந்த சூழலில் இந்தியப் பிரதமர் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக எடுத்துக்கொண்ட முடிவுகள் சில மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. தமிழர்களின் உரிமை தொடர்பான அனைத்து விடயங்களிலும் கரிசனை கொண்டு எதிர்காலத்தில் எமக்கான உரிமைகளை வென்றெடுக்க இந்தியா ஆதரவளித்துச் செயற்படும் என்றும் நம்புகின்றோம்.

ஈழத்தில் தமிழ்த்தேசியம் பேசிக்கொண்டிருக்கின்ற சில அரசியல் தலைவர்கள் 13ஆவது திருத்தத்திற்கு எதிராகவும் இந்தியாவின் செயற்பாடுகளுக்கு எதிராகவும் செயற்படுகிறார்கள். அவர்களுக்கு ஒரு செய்தியைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

எமது மக்களை ஏமாற்றி தொடர்ந்து ஒரு சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபட்டு நீங்கள் உங்கள் அதிகாரங்களைத் தக்கவைத்துக்கொள்வதைவிட மக்களுக்கான உண்மையான நேர்மையான ஓர் அரசியலைக் கொண்டு செல்வதற்காக இவ்வாறான கருத்துக்களைத் தவிர்த்து, மக்களைக் குழப்பாது, அனைவரும் ஒன்றிணைந்து 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொண்டு அந்தத் தளத்திலே நின்றுகொண்டு அந்தத் தளத்தைப் பலப்படுத்திக்கொண்டு எமக்கான சுய நிர்ணய உரிமையைப் பெற எதிர்காலத்தில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் - என்றார்.

# 13ஐ முழுமையாக அமுல்படுத்த தமிழ் தலைவர்கள் சிலரே தடை

## இப்படிச் சொல்கிறார் அமைச்சர் டக்ளஸ்



தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வுகள் அரசமைப்பில் உள்ளன. அதிலுள்ள 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதன் ஊடாக அத்தனை பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண முடியும் எனத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ள போதிலும் , தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீரா பிரச்சினைகளாகவே காணப்பட வேண்டும் என்று எண்ணும் சில தமிழ் தலைவர்கள் அதற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றனர் எனவும் குறிப்பிட்டார். ஜனாதிபதி ஊடக மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போது , ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்தும் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர் -

**கேள்வி :** ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரான்ஸ் விஜயத்தின் போது அந்நாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அதிகார பரவலாக்கம் குறித்த கோரிக்கைகளை சாதகமான முறையில் அணுகுவதாகத் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு?

**பதில் :** ஒரு கால கட்டத்தில் இலங்கையில் பிரச்சினைகள் காணப்பட்டன. அந்தப் பிரச்சிகளுக்குத் தீர்வு கோரி ஆரம்பத்தில் ஜனநாயக ரீதியான போராட்டங்களில் ஈடுபட்ட தமிழ் மக்கள் , அதன் ஊடாக தீர்வைப் பெற முடியாது என ஆயுதப் போராட்டங்களிலும் ஈடுபட்டனர். அதற்கமையவே இலங்கை - இந்திய ஒப்பந்தம் உருவானது.

எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த ஒப்பந்தத்தின் ஊடாக வழியேற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும் துரதிஷ்டவசமாக அன்றிருந்த பெரும்பாலான தமிழ் மக்கள் பிரதிநிதிகள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் ஒரு முழுமையான யுத்தத்தை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது.

எமது பிரச்சினைகளுக்கான தீர்வுகள் அரசியல் யாப்பில் காணப்படுகின்றன. 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த ஆரம்பித்தால் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண முடியும். எனினும் இதற்காக ஜனாதிபதி மாத்திரம் நடவடிக்கைகளை முன்னெடுத்தால் போதாது. தமிழ் மக்கள் தரப்பில் அவர்களின் பிரதிநிதிகள் உண்மையுடன் முன்வர வேண்டும்.

**கேள்வி :** 13 ஐ முழுமையாக நடைமுறைப் படுத்துவதில் பொலிஸ் , காணி அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும் என்று கோரப்படுகிறது. எனினும் மத்திய அரசாங்கம் அவற்றை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகத் தோன்றவில்லையே?

**பதில் :** இருப்பதிலிருந்தே முதலில் ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் மாத்திரமே முன்னோக்கிச் செல்ல முடியும். தேசிய நல்லிணக்கத்துக்கு ஊடாகவும் , நாடாளுமன்ற ஜனநாயகத்தின் ஊடாகவுமே பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். எனினும் சில தமிழ் தலைவர்கள் அதற்கு முரணான நிலைப்பாட்டையே கொண்டிருந்தனர். எவ்வாறிருப்பினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றதன் பின்னர் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

**கேள்வி :** இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஜனாதிபதி முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளை வடக்கு மக்கள் சாதகமான கோணத்தில் பார்க்கின்றனரா? இது தொடர்பில் எதிர்க்கட்சிகள் முரண்பாடான கருத்துக்களையல்லவா முன்வைத்துக் கொண்டிருக்கின்றன?

**பதில் :** எமது பிரச்சினைகளுக்கு நாமே தீர்வு காண வேண்டும். அந்த வகையில் சகல பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் நிச்சயம் தீர்வு காண முடியும் என்று நான் நம்புகின்றேன். இதற்கான சிறந்த அறிகுறிகளாக காணிப்பிரச்சினை , அரசியல் கைதிகள் எனக் கூறப்படுகின்றவர்களின் விடுதலை உள்ளிட்ட பல நடவடிக்கைகள் ஜனாதிபதியால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் துரதிஷ்டவசமாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீரா பிரச்சினைகளாகவே வைத்திருக்க வேண்டும் என எண்ணும் அரசியல்வாதிகளே குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

**கேள்வி :** வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கான ஒரு தீர்வாகவே மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. எனினும் தற்போது மாகாண சபைத் தேர்தல் தொடர்ந்தும் காலம் தாழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவ்வாறிருக்கையில் எந்த அடிப்படையில் ஜனாதிபதி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குவார் என்று எதிர்பார்க்கின்றீர்கள்?

**பதில் :** இந்தப் பிரச்சினைக்கு 1987 இல் தீர்வு வழங்கப்பட்டது. எனினும் அன்றிருந்தவர்கள் அதனை நிராகரித்ததோடு , மறுபுறம் அதனை முறைகேடாகப் பயன்படுத்திக் கொண்டனர். நாடு; எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் அதே வேளை , இந்த விடயங்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும். - என்றார். (05)



# வவுனியா ஆர்ப்பாட்டம் குறித்து மௌனம் ஏன்?

## ஜனநாயகப் போராளிகள் கட்சி கேள்வி

இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என்று கனேடிய நாடாளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்திற்கும் கனேடியப் பிரதமருக்கும் எதிர்ப்புத் தெரிவித்து அண்மையில் வவுனியாவில் அரசபடையினரின் தூண்டுதலில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்திற்குத் தீவிர தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் எவையும் கண்டனம் தெரிவிக்காது மௌனம் காப்பது ஏன்?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளது ஜனநாயகப் போராளிகள் கட்சி. யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த அந்தக் கட்சியின் இ.கதிர், இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் இடம்பெற்ற இனப்படு கொலைக்கான நீதியை நிலைநாட்டுவதற்கான முயற்சியாக கனடாவின் நாடாளுமன்றத்தில் இனப்படுகொலை தொடர் பான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதற்காக கனேடிய பிரதமருக்கும் கரி ஆனந்த சங்கரிக்கும் நன்றிகள். ஈழத் தமிழர்கள் பட்ட இன்னல்கள், துன்பங்கள் தொடர்பாக ஒரு நீதி விசாரணை இடம்பெறவேண்டும் என்பதற்காக உலக நாடுகளிலே பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றது.

அதனடிப்படையிலே கனடா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தமிழ் இனத்திற்கான அங்கீகாரமாக நாம் பார்க்கின்றோம்.

கனடாவின் இந்தத் தீர்மானத்துக்கும் கனேடியப் பிரதமரின் உரைக்கும் எதிராக ஜூன் 24 இலங்கை அரச படையினருடன் சேர்ந்தியங்கும் எமது இனத்தவர்கள் சிலர் மிகக் கேவலமாக ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். அவர்களை எப்படி அழைப்பது என்றுகூடத் தெரியவில்லை.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியம் பேசி அரசியல் செய்து–வரும் கட்சிகளில் எவையும் எந்த எதிர்வினையும் ஆற்றவில்லை. குறிப்பாக தீவிர தமிழ்த் தேசியம் பேசி, முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை முன்னிறுத்தி அரசியல் செய்பவர்கள்கூட இதற் கெதிராக ஒரு சிறு துரும்பைக்கூட அசைக்கவில்லை.

அவர்கள் தீவிர தமிழ்த் தேசியம் பேசினாலும் அவர்களின் செயற்பாடுகள் அரசுக்கு ஆதரவாகத்தான் இருக்கின்றது என்பது இதன் மூலம் வெளிப்படுகின்றது. வெறுமனே அவர்களது பேச்சு மட்டும்தான் தமிழ்த் தேசியத்தை இங்கே வலியுறுத்தி நிற்கின்றது. இப்படி, வார்த்தைகள் மூலம் தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டிருப்போரை மக்கள் தெளிவாக அடையாளம் காணவேண்டும். தமிழ் அரசியல் கட்சிகளின் இந்தச் செயற்பாடு தொடர்பாகவும் எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவ்வாறான அரச ஆதரவுக் குழுக்களை மக்கள் நிராகரிக்கவேண்டும். கனடாவில் மட்டுமல்ல பிரித்தானியாவிலும் இனப்படுகொலை தொடர்பான பிரேரணை முன்மொழியப்பட்டுள்ளதாக அறிகின்றோம். அங்குள்ள தமிழர்கள் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து பிரித்தானிய நாடாளுமன்றத்திலும் அத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றச்செய்யவேண்டும் –என்றார்.

# இந்திய மீனவர் பிரச்சினை குறித்து புதுடெல்லி செல்லும்போது பேச்சு

## மீன்பிடித்துறை அமைச்சர் தெரிவிப்பு

வடக்கிலுள்ள மீனவர்கள் நீண்டகாலமாக இந்திய மீனவர்களின் எல்லைதாண்டிய மீன்பிடி நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது உத்தியோகபூர்வ டில்லி விஜயத்தின் போது உரிய தரப்பினருடன் பேச்சுகளை முன்னெடுக்கவுள்ளார் எனக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இதேவேளை, எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்தால் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ள சுமார் 19 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு இதுவரையில் 3068 மில்லியன் ரூபா நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது. இந்த தீ விபத்தால் பாதிக்கப்பட்டு , ஆனால் இதுவரையிலும் நஷ்ட ஈடு கிடைக்காதோர் அதற்காக மீள விண்ணப்பிக்க முடியும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார். ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட , எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட காரணிகளால் பாதிக்கப்பட்டிருந்த கடற்றொழில் துறை சீரமைக்கப்பட்டு வருகிறது. அதற்கமைய வட மாகாணத்திலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வடக்கில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன் பிடி நடவடிக்கைகளால் எமது வளங்கள் அழிவுக்குள்ளாவதோடு மாத்திரமின்றி , மக்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி டில்லி விஜயத்தின் போது உரிய தரப்பினருடன் பேச்சுகளை முன்னெடுப்பார்.

இவை தவிர, கடற்றொழில் துறை மேம்பாட்டுக்காக கடலட்டை வளர்ப்பு, கடற்பாசி உள்ளிட்டவை 1500 ஏக்கரில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 5000 ஏக்கர் வரை இவ்வாறான கடற்பண்ணைகளை விஸ்தரிப்பதே எமது நோக்கமாகும். இறால் பண்ணை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பல முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர். அவர்களுக்கான உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

உதவி அரசாங்க அதிபர்கள் ஊடாக , கடற்றொழில் திணைக்களம், வர்த்தக நிறுவனம், கடலோர பாதுகாப்பு திணைக்களம் உள்ளிட்ட 4 தரப்புக்களின் கூட்டு செயற்பாட்டின் கீழ் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதே போன்று மீன்பிடித்துறை சார் சட்டங்களில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் அவற்றில் திருத்தங்களை மேற்கொண்டு , இவ்வருட இறுதிக்குள் அவற்றை அமைச்சரவையில் சமர்ப்பித்து நாடாளுமன்ற அங்கீகாரத்தை பெறுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்தால் பாதிக் கப்பட்டவர்களுக்கு 4 கட்டங்களில் நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது. கொழும்பு , கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மக்களே இதனால் அதிகளவில் பாதிக்கப்பட்டிருந்தனர். இம்மாவட்டங்களில் நேரடியாகப் பாதிக்கப்பட்ட சுமார் 15 ஆயிரத்து 32 கடற்றொழிலாளர்களுக்கும், மறைமுகமாக பாதிக்கப்பட்டுள்ள 4 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கும் நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது. எனினும் இந்த விபத்தினால் பாதிக்கப்பட்டு ஆனால் நஷ்டஈடு கிடைக்காதவர்கள் அதற்காக விண்ணப்பிக்க முடியும். இதுவரை 3068 மில்லியன் ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட்டுள்ளது. – என்றார். (05)

# அலி சப்ரி ஆதரவு

காலிஸ்தான் விவகாரத்தில் கனடா வாக்குவங்கி அரசியல் அடிப்படையில் செயற்படுகின்றது என்ற இந்திய அயலுறவுத்துறை அமைச்சரின் கருத்தை இலங்கை அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி ஆதரித்துள்ளார்.

அமைச்சர் அலிசப்ரி இதனை தனது ருவிற்றர் பதிவில், இந்திய அமைச்சரின் கருத்தை ஆதரித்து ''வாக்குவங்கி அரசியலன்றி வேறென்ன'' எனத் தெரிவித்திருக்கிறார்.

கனடாவில் சமீபத்தில் காலிஸ்தான் ஆதரவாளர்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இது குறத்து சமூக ஊடகமொன்றில் வெளியிட்டுள்ள வீடியோவில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கனடா வாக்கு வங்கி அரசியலை நோக்கமாக கொண்டு செயல்படுகின்றது போலதோன்றுவதாகக்கூறியிருந்தார்.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்று கனேடிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் அலி சப்ரி கடுமையாகக் கண்டிருந்திருந்தார். அந்தப் பின்னணியில் இப்போது இந்திய அமைச்சரின் கருத்தை ஆதரித்து அவர் பதிவிட்டுள்ளார்.

# உள்ளூராட்சி சபைகளை மீளகூட்டுவது பொதுமக்களின் இறைமைக்குப் பாதிப்பு

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கருத்து

கலைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை மீள கூட்டுகின்ற அதிகாரம், மக்களின் இறையாண்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களை மீள கூட்டும் அதிகாரத்தை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கும் சட்டமூலம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகளுக்கு குறிப்பிட்ட காலத்துக்கு மாத்திரமே அதிகாரம் வழங்கப்படுவதாகவும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பிட்ட பதவிகளின் கால அளவை தாண்டி அந்தந்த பதவிகளில் செயற்பட மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டியவர் அமைச்சர் அல்லர், மக்களே ஆவர். அதற்கான அதிகாரத்தை வழங்க வேண்டியது மக்களே ஆவர் என அவர் இதன்போது தெரிவித்தார். இது நாட்டின் ஜனநாயகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் கலைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களை மீண்டும் ஸ்தாபிப்பதற்கான அதிகாரத்தைவிடயத்துக்குப்பொறுப்பானஅமைச்சருக்கு வழங்கும்வகையில்நாடாளுமன்றஉறுப்பினர்ஜயந்த கெட்டகொடவின் தனிப்பட்ட பிரேரணை, சட்டமூலமாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது. மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், மாநகர சபைகள் திருத்தச் சட்டம் மற்றும் பிரதேச சபை சட்டம் ஆகிய சட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள சில சரத்துகளை திருத்துவதற்காக இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த சரத்துகள் திருத்தப்பட்டால் தற்போது கலைக்கப்பட்டுள்ள மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகளை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் நிர்ணயிக்கும் கால எல்லை வரை மீண்டும் ஸ்தாபிப்பதற்கான வாய்ப்பு கிடைக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

## தெஹிவளை சூவில் ஜுலை 3 முதல் சிறப்பு நிகழ்வுகள்

தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையில் ஜுலை 3 ஆம் திகதி முதல் ஒரு வாரத்துக்கு பல சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன.

தேசிய விலங்கியல் திணைக்களத் தின் 87ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையியே இந்த ஏற்பாடுகள் செய்-யப்பட்டுள்ளன.

ஜுலை3ஆம்திகதி 12 வயதுக்குஉட்பட்ட சகல சிறார்களுக்கும் மிருகக் காட்சிசாலையைஇலவச மாக பார்வையிடும் வாய்ப்பு வழங்கப்படும் என தேசிய விலங்கியல் திணைக்களத் தின்பணிப்பாளர்நாயகம் தெரிவித்துள்ளார். (05)



## கிளிநொச்சியில் உறவுகள் நேற்று கவனவீர்ப்பு



கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உற வுகள் நேற்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். குறித்த போராட்டம் நேற்று காலை 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளது அலுவலகம் முன்பாக A9 வீதியில் இடம்பெற்றது. 2383வதுநாளாகதொடர் போராட்டத்தை முன்னெடுத்துவரும் உறவுகள் ஒவ்வொரு மாதமும் 30ம் திகதி கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த போராட்டத்தின்போது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் புகைப்படங்களையும், சர்வதேசத்திடம் நீதி கோரிய பதாதைகளையும் மக்கள் ஏந்தியிருந்தனர்.

## புதிய கட்டணங்கள் இன்று முதல் அமுல்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத் தின் திருத்தியமைக்கப்பட்ட புதிய கட்டணங்கள் இன்று ஜுலை முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

2023ஜுன்23ஆம்திகதி 2337/27 இலக்க அதிவிசேட வர்த்தமானிமூலம்இலங்கை வெளிநாட்டுவேலைவாய்ப்பு பணியக பதிவு கட்டணங்கள் மற்றும்முகவர்நிலையத்தை புதுப்பிப்பதற்கான கட்ட ணங்கள்திருத்தப்பட்டுள்ளன.

வெளிநாடுகளுக்கு வேலைக்கு செல்லும் சகல இலங்கையர்களும்இலங்கை வேலைவாய்ப்பு பணியகத் தில் பதிவு செய்வது கட்டாய மாகும்.

அத்துடன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தை நடத்து-வதற்கான உரிமப் பத்திரத் துக்கான செல்லுபடியான கால எல்லை ஒரு வருடமா கும். மேலும் முகவர் நிறு வனத்தை தொடர்ந்துஇயக்கு-வதாயின், உரிமத்தை நீட்டிப்பதற்கு பணியகத் தின் ஒப்புதல் சட்டத்தின் விதி களின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

திருத்தப்பட்ட கட்டண விவரம் வருமாறு:

1. வெளிநாட்டு வேலை வாய்ப்புக்குசெல்வோருக்கான வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக பதிவுக் கட்டணம்: பழைய கட்ட ணம் - ரூ.17,928.00 (வரிகளுடன்) புதியகட்டணம் - ரூ.21,467.00 (வரிகளுடன்)

2. பதிவை புதுப்பித்தல் கட்டணம்: பழைய கட்டணம் - ரூ.3,774.00 (வரிகளுடன்) புதியகட்டணம் ரூ.4,483.00 (வரிகளுடன்)

3. வேலைவாய்ப்பு முகவர் உரிமத்தை புதுப் பித்தல் கட்டணம்: பழைய கட்டணம் ரூ.58,974.00 (வரிகளுடன்) புதியகட்டணம் ரூ.117,949.00 (வரிகளுடன்). (05)

## குழந்தைகள் எதிர்கொள்ளும் ஆபத்தான நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்கு மருத்துவர்கள் இல்லையாம்

### ஒரேயொருவர் மருத்துவரும் நாட்டைவிட்டு வெளியேறினார்

இலங்கையின் குழந்தைகளிற்கான மிக முக்கியமான விசேடவைத்தி யர் ஒருவரும் நாட்டை விட்டு வெளி யேறியுள்ளார்.

இலங்கையின் ஒரே யொரு குழந்தைகளிற்கான கதி ரியக்கசிகிச்சைநிபுணரே நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார்.

விசேடவைத்தியர் சங்கத்தின் வைத்தியர் அசோக் குணரட்ண இதனை தெரிவித்துள்ளார்.

2024 முதல் 2025 வரையிலான காலப்பகுதியில் 4000 விசேடவைத் திய நிபுணர்கள் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது ஆனால் தற்போது 2000 பேரே உள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

விசேட வைத்தியர்களிற்கான ஓய்வூதிய வயது குறித்த அரசாங்கத்தி ன் அறிவிப்பு காரணமாக எஞ்சியுள்ள 50 வீதமான வைத்தியர்களில் 250 பேரை இழக்கவேண்டிவரும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக நாட்டில் 1750 விசேடவைத்தியர்களே காணப்படும் நிலைமைஉருவாகும்எனதெரிவித்துள்ள அவர் அவசரமருத்துவ பிரிவை சேர்ந்த 30 வைத்தியர்களிற்கு விசேட வைத்தி யர்கள் பயிற்சியை வழங்கினோம். ஆனால் அவர்களில் 20 பேர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2024-25 இல் நாட்டிற்கு 289 மயக்கமருந்து நிபுணர்கள் அவசியம் என மதிப்பிடப்பட்டுள்ளது ஆனால் இந்த வருடம்155 பேரே எஞ்சியிருப்பார்கள் 30 பேர்வெளிநாடுகளுக்குசென்றுவிட்டனர் 60 வயதானவர்கள் ஓய்வு பெற்றால் 20 பேர் மாத்திரமே எஞ்சுவார்கள் என வைத்தியர்குணரட்ணதெரிவித்துள்ளார்.

மருத்துவர்கள் நாட்டிலிருந்து வெளியேறிய பின்னர் 100 விசேட வைத்தியர்களும் மயக்கமருந்து நிபு ணர்களும் எஞ்சியிருப்பார்கள் எனக் கூறுவது துரதிஷ்டவசமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார். இலங்கையில் ஒரேயொரு குழந்தைகள் தொடர்பான கதிரியக்க நிபுணராக இருந்தார். அவரும் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார் என வைத்தியர்குணரட்ணதெரிவித்துள்ளார். (05)

## இன்றும் நாளையும் சிறுவர் நாடக திருவிழா

### நல்லூரில் மாலை 6.30 மணி முதல்

யாழ்ப்பாணம் செயல் திறன் அரங்க இயக்கமும் இலங்கை, இந்திய கலை இலக் கிய அமைப்பான முற்றமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள சிறுவர் நாடகத் திருவிழா இன்றும் நாளையும் நல்லூரில் உள்ள அரங்கத்தில் இடம்பெறவுள்ளது.




மாலை 6.30 மணியளவில் தொடங்கும் நிகழ்வில் நாளொன்றுக்கு இரண்டு நாடகங்கள் மேடையேற்றப்பட வுள்ளன என்று செயல் திறன் அரங்க இயக்க நிறுவுனர் தே.தேவானந் தெரி வித்தார்.

இருநாள்நிகழ்வில் (அ)சிங்கம், முயலார் முயல்கிறார் மற்றும் கூடி விளையாடு பாப்பா ஆகிய மூன்று நாடகங்கள் மேடை யேற உள்ளன.

இன்று (அ)சிங்கம் மற்றும்கூடிவிளையாடு பாப்பாஆகியநாடகங்கள் மேடையேறவுள்ளன. மாலை 7.10 முதல் நாடகத்தின் அரங்கேற்றம் இடம்பெறும் தொடர்ந்து 7.45 மணிக்கு இரண்டாவது நாடகம் மேடை யேறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

சிறுவர்களுக்கு உள ஊக்கத்தையும், செயற்பாட்டுத் திறனையும் அதிகரிக்கக்கூடிய வகையிலான அரங்கச் செயற்பாடுகள் நாடகங்கள் தொடங்குவதற்கு முன்னரும் நாடகங்கள் முடிந்த பின்னரும் இடம்பெறும் என்பதால்,பார்வையாளர்களானபிள்ளைகளை மாலை 6.30 மணிக்கே அரங்கிற்கு அழைத்து வருவது சிறந்தது என்று செயல்திறன் அரங்க இயக்க நிறுவுனர் அழைப்பு விடுத்துள்ளார்.

செயல்திறன் அரங்க இயக்கம் கடந்த 20 ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தில் அரங்கச் செயற்பாடுகளில் தீவிரமாக இயங்கிவரும் ஓர் அமைப்பு.

குறிப்பாக, சிறுவர் அரங்கத்தில் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. அரங்கை சிறுவரின் உளவிருத்திக்காகப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு தனது செயற்றிட் டங்களை வடிவமைத்துச் செயற்படுத்தி வருகின்றது. வருடாந்தம் நல்லூர் உற்சவ காலங்களில் நல்லூர் நாடகத் திருவிழா என்ற நிகழ்வைப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்தி வந்தது. கொரோனா பெருந்தொற்றைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் நிறுத்தப்பட்ட நிலையில் மீண்டும் இந்த சிறுவர் நடாகத் திருவிழாவின் ஊடாக தனது அரங்கப் பயணத்தைத் தீவிரப்படுத்தியிருக்கின்றது.

## பிரமியின் 'கனதி' நூல் வெளியீடு

( ஹஸ்பர் )

எழுத்தாளர் சேனையூர் பிரம்மியா சண்முகராஜாவின் கனதி சிறுகதை நூல் வெளியீட்டு விழா, ஜுலை 3 காலை 9.30 மணிக்கு திருகோணமலை நகரசபைபொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

எண்ணம் போல் வாழ்க்கை அமைப் பின் தலைவர் கனக.தீபகாந்தன் தலைமையில் நடைபெறும்நிகழ்வில் தலைமை அதிதியாக திருகோணாமலை மாவட்ட உள்-ளூராட்சிஉதவிஆணை யாளர் சூ. பார்த்தி பனும், கௌரவ விருந்தினர்களாக மூத்த எழுத்தாளர் கேணிப்பித்தன் ச.அருளானந்தமும், திருகோணமலைபுனித மரியாள் கல்லூரியின் ஆசிரியர் க.ராஜனும் கலந்து சிறப்பிக்கவுள் ளனர்.

நூலின் வெளி யீட்டு உரையை இலக்குமி பிரசுராலய இயக்குநர் கரவை மு.தயாளனும், நூல் விமர்சனத்தை வ.முரளிதரனும்வழங்க, நூல் வெளியீட்டினை கவிஞர் லெல்லிதாசன் தொடக்கி வைப்பார். ஏற்புரையினை நூலாசிரியர் வழங்கு-வார்.



## ஓட்டோ விபத்தில் மாணவர்கள் காயம்

பண்டாரவளை - கொஸ்லந்த பகுதி யில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

குறித்தவிபத்துநேற்று(வெள்ளிக்கிழமை) காலை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

அந்தவகையில் கொஸ்லந்த பகுதி யில்பயணித்தஓட்டோ20அடிபள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 4 மாணவர்கள் காயம டைந்துள்ள நிலையில் கொஸ்லந்த வைத்தியசாலையில் சேர்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்லந்த பொலி-ஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## ஓய்வுக்கு தயாராகிய பொலிஸ் மா அதிபர்

சீ.டி.விக்ரமரட்ன ஓய்வு பெறுவதால் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் இருந்த அனைத்து உடைமைகளையும் அவர் அகற்றியுள்ளார் என பொலிஸ் தலைமை யக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜுன் 26 தனது பதவிக் காலம் பூர்த்தி யானதன் பின்னர் அவர் இவ்வாறு, அலுவலகத்தை காலி செய்துள்ளார் எனப் பொலிஸ் தலைமையக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அலுவலகத்தின் தளபாடங்கள் தவிர்ந்த ஏனைய பொருள்கள் எடுத்துச் செல்லப் பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் மா அதிபர் பதவி வெற்றிட மாகியுள்ள காரணத்தால் நிர்வாக நடவடிக்கைகளுக்குபாதிப்புஏற்பட்டுள்ளதாக தெற்கு ஊடகமொன்று செய்தி வெளி யிட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. 05)

## முன்னுக்குப் பின் முரண்பாட்டோடு பேசுகிறார் மத்திய வங்கி ஆளுநர்

தேசிய கடன்களை மறுசீரமைத்தால் வங்கி கட்டமைப்பு பாதிக்கப்படுமென மத்திய வங்கியின் ஆளுநர் விசேட அமைச்சரவை கூட்டத்தில் தெரிவித்தபோதும் மக்களிடத்தில் அதனை முழுமையாக மறைத்துள்ளார் என்று சுதந்திர மக்கள் சபையின் பிரதி நிதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாலக கொடஹேவா தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசியகடன்மறுசீரமைப்புவிவகாரத்தில் மக்களின் கருத்துக்களுக்கு அரசாங்கம் மதிப்பளிக்கவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நித்திரையில் இருந்து எழுந்ததை போல் நாடாளுமன்றத்தை கூட்டிதேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் தீர்மானம் எடுக்கவுள்ளார்.

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் உலகில் எந்த நாடும் இயற்றிக் கொள்ள வில்லை. இலங்கையை போன்று பொருளாதார பாதிப்பை எதிர்க்கொண்டுள்ள பாக்கிஸ் தான் சர்வதேச நாணய நிதியத்தி ன் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டுள்ளது. இருப்பினும்தேசியகடன்களைமறுசீரமைக் கவில்லை.

தேசியகடன்களைமறுசீரமைக்குமாறு சர்வதேசநாணய நிதியம் நிபந்தனை விதிக் கவில்லை. கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சிறந்த தீர்மானத்தை முன்வையுங்கள் என்ற ஆலோசனையை மாத்திரம் நாணய நிதியம் முன்வைத்துள்ளது.

ஊழியர் சேமலாப நிதியத்திடமிருந்து அரசாங்கம்பெற்றுக்கொண்டுள்ளகடன்களை நீண்டகால கடனாக மாற்றியமைக்க தீர்மா னிக்கப்பட்டுள்ளதால் நிதிய வைப்பாளர்கள் பாதிக்கப்படுவார்கள். சாதாரண தொழில் துறை முதலீட்டாளர்கள் கூட நிச்சயம் பாதிக்கப்படுவார்கள்.

ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற விசேட அமைச்சரவை கூட்டத்தில் தேசிய கடன்கள் மறுசீரமைக்கப்படும்போது வங்கி கட்டமைப்பு பாதிக்கப்படும் என மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் மக்கள் மத்தியில் வங்கி கட்டமைப்புக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என குறிப்பிடுகிறார். தேசிய கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் பிரதான எதிர்க்கட்சி ஜனாதிபதிக்கு சார்பாக செயற்படுகிறது என்றார்.


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்


காலைக்கதிர்
Kalaikkathir

# உயர்ஸ்தானிகர்கள் மூவரும் தூதுவர்கள் 7 பேரும் பதவியேற்பு

புதிதாக நியமிக்கப்பட்ட உயர்ஸ்தானிகர்கள்மூவரும் தூதுவர்களும் ஏழு பேரும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தங்களது நற்சான்றுப் பத்திரங்களை கையளித்தனர். கண்டி ஜனாதிபதி மாளிகையில் நேற்று (வெள்ளிக்கிழமை) இந்த நிகழ்வு இடம்பெற்றது.

புதிதாக நியமிக்கப்பட்ட உயர்ஸ்தானிகர்கள் திரினிடாட் மற்றும் டொபாகோ குடியரசு, உகண்டா குடியரசு மற்றும் சீஸெல்ஸ் குடியரசு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இதேவேளை, பனாமா குடியரசு, பெல்ஜியம், ஹெலனிக் குடியரசு, சிரிய அரபுக் குடியரசு, பெரு குடியரசு, கொரியா குடியரசு மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகளுக்கானதூதுவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் வெளிநாட்டுஅலுவல்கள்இராஜாங்க அமைச்சர்தாரகபாலசூரியவும் கலந்துகொண்டிருந்தார்.











## வவுனியாவில் வாள்வெட்டில் ஒருவர் காயம்: விசேட அதிரடிப்படையினரால் மூவர் கைது!

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டில் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வியாழக்கிழமை இரவு 11மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும்தெரியவருவதாவது-

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதிக்கு ஜீப் ரக வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றில் வந்த குழுவினர் அந்தப் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் மீது வாளால் வெட்டிவிட்டு தப்பிச் செல்ல முயன்றுள்ளனர். இதன்போது, கிராம மக்கள் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கிய போதும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வரவில்லை என பொது மக்கள்குற்றம்சாட்டியுள்ளனர். இதனையடுத்து, கிராம மக்கள் விசேட அதிரடிப்படையினருக்கு தகவல்வழங்கியதையடுத்து அங்கு வந்த விசேட அதிரடிப்படையினர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் மூன்று பேரை கைது செய்து வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைந்துள்ளனர்.

அத்துடன் தாக்குதலில் ஈடுபட்டவர்களின் ஜீப்பும் மீட்கப்பட்டுள்ளதுடன், அதில் இருந்து இரு வாள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில் பண்டாரிக்குளம் பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய செல்வம் தவேந்திரன் வாள்வெட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் பண்டாரிக்குளம், மகாறம்பைக்குளம் மற்றும் வெளிக்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (05)

## பெண்ணாக வாழ விருப்பமில்லை ஆணாக வாழவே விரும்புகிறேன்

### தற்கொலை செய்துகொண்ட 14 வயது சிறுமி கடிதம்

'நான்ஓர்ஆண்பிள்ளை போல, சிறுவனை போல வாழஆசைப்படுகிறேன்'என கடிதம் எழுதிவைத்துவிட்டு, 14 வயது சிறுமியொருவர் தற்கொலை செய்துகொண்ட பரிதாபகரமானசம்பவம்இலங்கையில் இடம்பெற்றுள்ளது.

இந்த 14 வயது மாணவியின் சடலம் மீட்கப்பட்ட அறையில் கடிதமொன்று காணப்பட்டதாகபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த சிறுமி, ஒரு சிறுவனைப் போல நடந்துகொள்வார் என்றும் அவரது அந்த இயல்பினை மாற்றிக் கொள்ள வேண்டும் என உறவினர்கள் சிறுமிக்கு அழுத்தம் கொடுத்துள்ள நிலையிலேயே அவள் இறந்துள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

சிறுமி அக்கடிதத்தை தனது தாயாருக்கு எழுதியுள்ளார்எனக்கூறப்படுகிறது.

அந்த கடிதத்தில் சிறுமி-

நான் ஆணாக, சிறுவனாக வாழவே ஆசைப்படுகிறேன். ஒரு பெண்ணாக வாழ்வதை நினைத்து நான் கவலைப் படுகிறேன்.

ஒரு பெண்குழந்தையாக பிறந்து வாழ்வது எனக்குகவலையளிக்கிறது. நான் ஓர் ஆணை போல வாழ விரும்புகின்றேன். ஆனால், அதற்கு அனுமதிக்கின்றார்கள் இல்லை.

தாக்கப்பட்ட சிறுமியாக வாழ்வது குறித்து நான் கவலையடைகிறேன்.

நான் வீட்டிலும் பாடசாலையிலும் ஒரு பெண்பிள்ளை போல வாழவேண்டியுள்ளது. ஓர் ஆண்பிள்ளையாக நான் இல்லாதது எனக்கு கவலையளிக்கிறது என எழுதியுள்ளார்.

அத்தோடு, அச்சிறுமி தான் தொலைக்காட்சிகளில் பார்த்த கொரிய நடிகர் மீது பெரும் விருப்பத்தை கொண்டிருந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

## சித்திரவதைகளில் இருந்து பாதுகாப்பு என்னும் தொனிப்பொருளில் பொலிஸாருக்கு கருத்தரங்கு!



சித்திரவதையால் பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவளிக்கும் சர்வதேச தினத்தை முன்னிட்டு, யாழ். பிராந்திய காரியாலயத்தில் பொலிஸ் அதிகாரிகளுக்கு விசேட கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கருத்தரங்கில் பிரதான வளவாளராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் செயற்பட்டார்.

இக்கலந்துரையாடலில் சித்திரவதையிருந்து பாதுகாப்பு என்னும் தலைப்பில் சித்திரவதைக்கு எதிரான சர்வதேச மற்றும் உள்நாட்டு சட்டங்கள் தொடர்பில் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது,

மேலும் சித்திரவதைக்கு எதிரான தண்டனைகள் தொடர்பிலும் சித்திரவதையிலிருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பில் இலங்கைமனிதஉரிமைகள் ஆணைக்குழுவின்வகிபாகம் என்பன கலந்துரையாடப்பட்டன. (05)

## பொலிஸ் மா அதிபர் நியமனம் குறித்து பேராயர் மெல்கம் ரஞ்ஜித் அதிருப்தி!



புதிய பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பில், கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு கடிதமொன்றைஅனுப்பியுள்ளார்.

அதில் இலங்கையில் பொலிஸ் மா அதிபரின் வகிபாகம் இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பேணுதல், பொது மக்களுக்குப் பாதுகாப்பை வழங்குதல் போன்ற பொறுப்புகளுடன் நேரடியாகத் தொடர்புடைய மிகவும் முக்கியமான பங்கு என்பதைகவனத்தில்கொள்ள வேண்டும்.

அந்தவகையில் தற்போதையபொலிஸ்மாஅதிபர் சந்தனடி.விக்கிரமரத்னவுக்கு வழங்கப்பட்ட சேவை நீடிப்பு ஜூன் 26, 2023 அன்று முடிவடையவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பதவிக்கு பரிந்துரைக்கப்பட்ட பெயர்களில், மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிதுந்த ஜயவர்தன மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஆகியோர் உள்ளனர் எனப் பல்வேறு ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

சிரேஷ்டபிரதிப்பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன பணிப்பாளராக கடமையாற்றிய போதே ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இத்தாக்குதலில் கத்தோலிக்க திருச்சபை மற்றும்ஏனைய சமூகங்களைச் சேர்ந்த பெரும்பான்மையான அப்பாவி மக்கள் உயிர்களையும் அவயவங்களையும் இழந்தனர்.

எனவே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க புதிய பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டுமென ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள குறித்த கடிதத்தில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

## ருவென்வெலிசாய விகாரையில் இருந்து வவுனியாவுக்கு தேரர்கள் பாதயாத்திரை







ருவென்வெலிசாய விகாரையில் இருந்து வவுனியாவில் உள்ள விகாரை நோக்கி பௌத்த தேரர்கள் பாதயாத்திரை ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

அனுராதபுரத்தில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க ருவென்வெலிசாய விகாரையில் கடந்த 28 ஆம் திகதி கல்காமு சாந்தபோதி பௌத்த பிக்கு தலைமையில் ஆரம்பமான குறித்த பாதயாத்திரை நேற்று (வெள்ளிக்கிழமை) காலை வவுனியா கண்டி வீதியில் உள்ள விகாரையை வந்தடைந்தது.

அங்கிருந்து வவுனியாவில் தமிழர் பகுதியைக் கையகப்படுத்திகுடியேற்றம்செய்யப்பட்டகாலபோகஸ்வேவ பகுதியில் உள்ள சபுமல்கஸ்கட விகாரையை சென்றடையவுள்ளது.

குறித்த பாத யாத்திரையில் 50 இற்கு மேற்பட்ட பௌத்த தேரர்கள், மறைந்த பௌத்த தேரர்களின் கேசம், பற்சின்னம் உள்ளிட்ட புனிதப் பொருள்களுடன் சென்று அதனை அங்கு பார்வைக்கு வைப்பதுடன், எதிர் வரும் போயா தினத்தன்று விசேட பூஜை நிகழ்வையும் நடத்தவுள்ளனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.07.2023இல் வெளியிடப்பெற்றது.